Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 058 | வியாழக்கிழமை Thursday | 28.05.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# டெல்லியில் முதலமைச்சர் விஜய்; பிரதமர் மோடியுடன் சந்திப்பு



தமிழ்நாடு சட்டப் பேரவை தேர்தலில் 108 இடங்களை பிடித்த தமிழக வெற்றிக் கழகம், காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக் ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் அறுதி பெரும்பான்மையை பெற்று ஆட்சியமைத்தது. தமிழ்நாட்டின் முதலமைச்சராக ச. ஜோசப் விஜய் பொறுப்பேற்றபின்னர், 200 யூனிட் இலவச மின்சாரம், சிங்கப்பெண் அதிரடி படை, போதைப்பொருள் தடுப்புச் சிறப்புப் படை ஆகிய மூன்று திட்டங்களில் முதல் கையெழுத்துப் போட்டார். இதனையடுத்து 717 டாஸ்மாக் கடைகள் மூடல், வரம்புடன் விவசாயக் கடன் தள்ளுபடி போன்ற அதிரடி அறிவிப்புகளை வெளியிட்டார். தமிழ்நாட்டின் முக்கியப் பிரச்சினைகளாகப் பார்க்கப்படும் மேகதாது அணை விவகாரம், கரீப் காலத்திற்கான உரவிநியோகம், மாநில மேம்பாட்டிற்கான நிதி, மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடிக்கு முதலமைச்சர் விஜய் கடிதம் எழுதியிருந்தார்.

இந்த நிலையில், பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து மேற்கூறிய பிரச்சினைகள் குறித்து விவாதிக்க முதலமைச்சர் விஜய் டெல்லி புறப்பட்டு செல்கிறார். சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் காலை 10 மணிக்கு புறப்பட்டு செல்லும் விஜய், பகல் 12:30 மணியளவில் டெல்லி சென்றடைந்தார். பிரதமர் மோடியை சந்திக்கிறார்., அதன்பின்னர், மாலை 6:45 மணியளவில் உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்தித்தார். பேச உள்ளதாகவும், இரவு 7:30 மணிக்கு நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை சந்தித்து கோரிக்கை மனு அளித்தார். . டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்திற்கு வந்த முதலமைச்சர் விஜய்க்கு, அதிகாரிகள் பூங்கொத்து கொடுத்து வரவேற்பு அளித்தனர். பின்னர், அங்குள்ள காவலர்கள் அணிவகுப்பு மரியாதை அளித்தனர். டெல்லிக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய். மதியம் 1 மணியளவில் தலைநகர் சென்றடைந்தார். அரசு முறைபயணமாக டெல்லி புறப்பட்டு சென்றுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு மற்றும் குடியரசுத் துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் ஆகியோரை சந்தித்தார். சென்னை நீலாங்கரை இல்லத்தில் இருந்து புறப்பட்டு சென்னை விமான நிலையம் வந்தடைந்தார் முதலமைச்சர் ஜோசப் விஜய். சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் டெல்லி சென்றார் முதலமைச்சர் விஜய். டெல்லியில் தங்கும் முதல் அமைச்சர் விஜய், அகில இந்திய காங்கிரஸ் மூத்ததலைவர் சோனியா காந்தி மற்றும் ராகுல் காந்தியையும், அதன் பின்னர் இந்திய கம்யூனிஸ்டு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி தலைவர்களையும் சந்திக்க திட்டமிட்டிருப்பதாகவும், அந்த சந்திப்பை முடித்ததும் அன்றைய தினமே முதல்-அமைச்சர் விஜய் சென்னை திரும்ப இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.




# பினராயி விஜயன் வீடு உட்பட 12 இடங்களில் அமலாக்கத்துறை சோதனை; திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம்



திருவனந்தபுரம்:

கேரளம் மாநிலத்தின் தற்போதையை எதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான பினராயி விஜயனின் வீடு உட்பட பன்னிரண்டு இடங்களில் அமலாக்கத்துறையினர் திடீர் சோதனை நடத்தி வருகின்றனர். அண்மையில் நடந்த கேரளம் மாநில சட்டமன்றத் தேர்தலில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான இடது ஜனநாயக முன்னணி தோல்வியடைந்து, காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெற்று புதிய ஆட்சி அமைந்தது. 2016 முதல் 2026 வரை தொடர்ந்து 10 ஆண்டுகள் முதலமைச்சர் பதவி வகித்த பினராயி விஜயன், தற்போது எதிர்க்கட்சித் தலைவராக உள்ளார். அவர் திருவனந்தபுரத்தில் உள்ள ஒரு வாடகை வீட்டில் வசித்து வருகிறார்.

இந்த நிலையில், 2018-19 காலகட்டத்தில், பினராயி விஜயனின் மகள் வீணா-வுக்கு சொந்தமான எக்ஸாலாஜிக் (Exalogic) நிறுவனத்துக்கு, கொச்சினை மையமாகக் கொண்டு இயங்கும் 'கொச்சின் மினரல்ஸ் அண்டு ரூடைல் லிமிடெட்' (Cochin Minerals and Rutile Limited) என்ற கனிவள நிறுவனம் ரூ. 1.72 கோடி பணப் பரிமாற்றம் செய்தது. எந்தவொரு சேவைக்கானதொடர்பும் இருநிறுவனங்களுக்கும் இடையே இல்லாத நிலையில் இந்தபணிப்பரிமாற்றம் நடைபெற்றிருப்பது சர்ச்சையை கிளப்பியது. இதுதொடர்பாக பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் கடந்த 2024 ஆம் ஆண்டு அமலாக்கத்துறை வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றது. வீணா மட்டுமல்லாது அவருடைய கணவரும், முன்னாள் பொதுப் பணித்துறை அமைச்சருமான முகமது ரியாஸ் மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளிட்ட பலர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. அமலாக்கத்துறையின் விசாரணைக்கு எதிராக தொடரப்பட்ட மனுவை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்த நிலையில், இந்த அதிரடிச் சோதனையை அமலாக்கத்துறை தொடங்கியுள்ளது. இதன் அடிப்படையில் திருவனந்தபுரத்தில் உள்ள பினராயி விஜயனின் வாடகை வீடு உட்பட மொத்தமாக 12 இடங்களில் அமலாக்கத்துறையினரின் சோதனை நடத்தி வருகின்றனர்.

திருவனந்தபுரம், கோழிக்கோடு உள்ளிட்ட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இந்த சோதனை நடைபெற்று வருகிறது.

தற்போதைய சோதனையை தொடர்ந்து, விரைவில் அடுத்தகட்ட விசாரணைக்காக வீணா விஜயனை டெல்லியில் உள்ள தலைமை அலுவலகத்திற்கு அழைக்கும் வகையிலான சம்மன் அனுப்பப்படலாம் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன. திருவனந்தபுரத்தில் பினராயி விஜயன் வசிக்கும் வாடகை இல்லத்தில் அமலாக்கத்துறை சோதனை நடத்துவதாக வெளியான தகவலைத் தொடர்ந்து அங்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தொண்டர்கள் குவிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், அந்த பகுதியில் பரபரப்பு நிலவி வருகிறது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், முன்னாள் முதல்வரும், தற்போதைய கேரள சட்டப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவருமான பினராயி விஜயன் இல்லத்தில் நடைபெற்று வரும் அமலாக்கத் துறை சோதனைக்கு திமுகவின் தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில், "கேரள முன்னாள் முதலமைச்சர் பினராயி விஜயனுக்கு எதிராக அமலாக்கத்துறை நடத்திய சோதனைகளை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு எதிராக மத்திய முகமைகள் ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தப்படும் போக்கு அதிகரித்து வருவது குறித்த தீவிரமான கவலைகளை, இத்தகைய நடவடிக்கைகள் மீண்டும் ஒருமுறை எழுப்புகின்றன. தற்செயலாக, "பினராயி விஜயன் ஏன் இன்னும் பாஜக-வின் தாக்குதலுக்கு ஆளாகவில்லை?" என்று மீண்டும் மீண்டும் கேள்வி எழுப்பி வந்த சில காங்கிரஸ் தலைவர்கள் முன் வைத்த பொறுப்பற்ற குற்றச்சாட்டுகளின் உள்ளீடற்ற தன்மையையும் இது அம்பலப்படுத்துகிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | |

தொடர்புக்கு : ☎ +919444082959

# ஒன்றுபட்ட அணிகள்: பழனிசாமியை அதிமுக சட்டமன்றக் குழு தலைவராக்க சபாநாயகரிடம் கடிதம்

சென்னை: அதிமுகவில் தனியாக செயல்பட்ட வேலுமணி அணி, பழனிசாமி அணியுடன் மீண்டும் இணைந்தது. இதன்பின்னர் பழனிசாமியை அதிமுக சட்டமன்றக் குழு தலைவராக்க சபாநாயகரிடம் அவர்கள் கடிதம் அளித்தனர். நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக 47 இடங்களில் வென்றது. இதில் எஸ்.பி.வேலுமணி, சி.வி. சண்முகம் தலைமையில் 25 எம்எல்ஏ.க்கள் தவெகவுக்கு ஆதரவளித்தனர். 22 எம்எல்ஏ.க்கள் பழனிசாமிக்கு ஆதரவளித்தனர். அதிமுக சட்டப்பேரவைக் குழு தலைவராக வேலுமணியை நியமிக்க 25 எம்எல்ஏ.க்களும், பழனிசாமியை நியமிக்க 22 எம்எல்ஏ.க்களும் தனித்தனியாக சபாநாயகரிடம் மனு அளித்தனர்.

இதனையடுத்து அந்த 25 எம்எல்ஏ.க்களின் கட்சிப்பதவியை பறித்து



அதிரடி காட்டினார் பழனிசாமி. மேலும் அவர்கள் மீது கட்சித்தாவல் நடவடிக்கை எடுக்கவும் தயாரானார். இந்தச் சூழலில் வேலுமணி அணியில் இருந்த 4 எம்எல்ஏ.க்கள் தங்கள் பதவியை ராஜினாமா செய்துவிட்டு தவெகவில் இணைந்தனர். வேலுமணி அணியை சேர்ந்த நத்தம் விஸ்வநாதன் உள்ளிட்டோர் பழனிசாமியுடன் பேசினர். இதனையடுத்து இன்று எஸ்.பி.வேலுமணி தரப்பினர் பழனிசாமியை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினர். இதன் காரணமாக இருதரப்பிலும் நிலவிய குழப்பம் முடிவுக்கு வந்தது.

அதிமுகவின் இரு அணிகளுக்குள்ளும் சமரசம் ஏற்பட்டதை அடுத்து, அவர்கள் கூட்டாக தலைமைச் செயலகம் சென்று ஏற்கெனவே வேலுமணியை சட்டப்பேரவைக் குழு தலைவராக்க அளித்த மனுவை திரும்பப் பெற்றனர். அதுபோல வேலுமணி அணியை தகுதிநீக்கம் செய்யக்கோரிய கடிதத்தை பழனிசாமி தரப்பும் திரும்பப் பெற்றது.

இதன்பின்னர் அனைzவரும் கூட்டாக பழனிசாமியை அதிமுக சட்டமன்றக் குழு தலைவராகவும், அக்ரி கிருஷ்ணமூர்த்தியை கொறடாவாகவும் நியமிக்க கோரி சபாநாயகர் ஜேசிடி பிரபாகரிடம் கடிதம் அளித்தனர். இந்த சந்திப்புகளில் சி.வி.சண்முகம் மட்டும் இடம்பெறவில்லை.

**செய்திகள்**

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# வெப்ப அலை உச்சநிலையில் இருப்பதால் மாணவர்கள் நலன் கருதி கோடை விடுமுறையை நீட்டிப்பு செய்ய

## தமிழ்நாடு முதலமைச்சர் விஜய்யிடம் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் நிறுவனத் தலைவர் சா.அருணன் கோரிக்கை



கோடை விடுமுறை முடிந்து வருகிற ஜூன் ஒன்றாம் தேதி 4ஆம் வகுப்பு முதல் 12 வகுப்பு வரை பள்ளிகள் திறக்கப்படும் எனவும் 1ஆம் வகுக்கு முதல் 3ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஜூன் 4ஆம் தேதி திறக்கப்படும் என பள்ளிக்கல்வித்துறை மாண்புமிகு ஆ.ராஜ்மோகன் அவர்கள் அறித்தார் இந்த நிலையில் பல்வேறு கட்சிகள் அமைப்புகள் வெப்ப அலை எப்போதும் இல்லாத அளவு அதிகறித்துள்ளதால் கோடை விடுமுறையை நீட்டிக்க கேட்டுக் கொண்டு உள்ளனர்


மேலும் பல மாவட்டங்களில் 100 டிகிரிக்கும் மேல் வெயில் சுட்டெரிக்கிறது இந்நிலை தொடர்ந்து நீடிக்கும் என வானிலை மயம் தெரிவித்திருக்கிறது , இந்நிலையில் வெயில் சுட்டெரிக்கும் இந்த சூழலால் மாணவர்கள் பள்ளிக்கு செல்வதில் பெரும் சிரமம் ஏற்படும் , வீட்டிற்குள்ளேயே வெப்பம் தாங்க முடியாமல் அவதிப்படும் நிலையில் வகுப்பறையில் மாணவர்கள் அமருவதிலும் சிரமம் ஏற்படும் ஆதலால் மாணவர்கள் நலன் கருதி பள்ளிகளுக்கு கோடை விடுமுறையை மேலும் 10 நாட்கள் நீட்டுப்பு செய்ய மாண்புமிகு ச.ஜோசப் விஜய் அவர்களையும் முதலமைச்சர் அவர்களையும் மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ஆ. ராஜ்மோகன் அவர்களையும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

சா.அருணன் நிறுவனத் தலைவர்

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு



தமிழகஅரசு நடமாடும் இலவச டிஜிட்டல் Xray திட்டத்தின் கீழ் அல்லிநகரம் 5வது வார்டில் பகவதி அம்மன் கோவில் அருகில் 80 பயனாளிகளுக்கு இலவசமாக Xray எடுத்த இனிய தருணம். உடன் K.சௌந்தரபாண்டியன் STS, M.முகமது அசது STLS, S.நாகேந்திரன் Radio grapher, R.ரேவதி Radio grapher, S.காமாட்சி ஓட்டுநர் மற்றும் 5 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் Dr.s.கிருஷ்ணபிரபா அய்யப்பன் மற்றும் Gr.அய்யப்பன் தலைவர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம், தேனி ஆகியோர் கலந்து கொண்டனர்.



தமிழக வெற்றிக்கழக பொதுச் செயலாளர் புஷி ஆனந்த் ஸ்ரீயோக சித்தரை சந்தித்து ஆசி பெற்றார்.




உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ளது கிளியூர் எம். குண்ணத்தூர் ஆகிய கிராமத்தில் உள்ள கிராம நிர்வாகம் அலுவலகம் கட்டிடம் உள்ளது. சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட இந்த கட்டிடம் தற்போது மிகவும் சேதம் அடைந்து கான்கிரீட் கூரை பெயர்ந்து விழுந்து வருகிறது. இதனால் இந்த கிராம உதவி அலுவலகம் பணிபுரியும் அரசுத்துறை அதிகாரிகள் பொதுமக்கள் அச்சத்துடன் அலுவலகத்திற்கு சென்று வருகின்றனர். இதுபோல் உளுந்தூர்பேட்டை தொகுதியில் 70க்கும் மேற்பட்ட கிராம நிர்வாகம் அலுவலகம் சேதம் அடைந்துள்ளன

இது குறித்து புரட்சி பாரதம் கட்சியின் கிழக்கு மாவட்ட செயலாளர் முனைவர் K.K..ஏழுமலை மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு வைத்துள்ள கோரிக்கை மிகவும் பழமையான கிராம நிர்வாகம் கட்டிடத்தை இடித்துவிட்டு புதிய கட்டிடம் கட்டித்தர வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.



கன்னியாகுமரி மாவட்டத்தில் விதிமுறைகளை மீறி செயல்படும் கல் குவாரிகளை ஆய்வு செய்ய வருகை தந்த கனிமம் மற்றும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் பிரபு அவர்களை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி விவசாய பிரிவு மாநில பொதுச் செயலாளர் ஆர்.எஸ் ராஜன் சந்தித்தார்



நீலகிரி மாவட்டம், கூடலூர் அருகே உள்ள முக்கட்டி,பாக்கனா பகுதியில், காட்டு யானை தாக்கி சிறுவன் உயிரிழந்த சம்பவத்தை தொடர்ந்து பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டு வருகின்றனர். மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், காட்டு யானை அட்டகாசத்திற்கு நிரந்தர தீர்வு காணவும் அரசாங்கம் மற்றும் வனத்துறை உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை...

# வேப்பூரில் முழுமையான பயிர்க்கடன் தள்ளுபடி செய்யல்கோரி விவசாயிகள் கண்டன ஆர்ப்பாட்டம்



அனைத்து விவசாயி களுக்கும் எவ்வித பாரபட்சமுமின்றி முழுமையாகப் பயிர்க்கடன் தள்ளுபடி செய்ய வலியுறுத்தி, தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாய சங்கம் சார்பில் வேப்பூர் கூட்ரோட்டில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழக முதல்வர் கடந்த மே 25-ம் தேதி பயிர்க்கடன் தள்ளுபடி குறித்த அறிவிப்பை வெளியிட்டார். அந்த அறிவிப்பில் அனைத்து தரப்புவிவசாயிகளுக்கும் முழுமையான கடன் தள்ளுபடி செய்யப்படாதது, விவசாயிகளிடையே பெரும் அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தி உள்ளதாக விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

முதல்வரின் இந்த அறிவிப்பைக் கண்டித்தும், அனைத்து விவசாயிகளுக்கும் முழுமையான பயிர்க்கடன் தள்ளுபடி வழங்கக் கோரியும் நேற்று (மே 27) காலை சுமார் 10 மணியளவில் வேப்பூர் கூட்ரோடு பகுதியில் விவசாயிகள் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாய சங்கத்தின் வேப்பூர் வட்டாரத் தலைவர் வரமபனூர்ராஜாதலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், அப்பகுதியைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள் கலந்துகொண்டு தங்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர்.



கேரள மாநிலத்திற்கு கொண்டு செல்லப்படும் கனிம வளத்திற்கு தமிழ்நாடு அரசு பசுமை வரி கட்டணத்தை தற்பொழுது இருப்பதைவிட சுமார் ஆயிரம் மடங்கு அதிகரித்தால் தமிழகத்தில் இருந்து கேரள மாநிலத்திற்கு அதிக அளவில் அதிக வாகனங்களுக்கு கனிம வளங்கள் கொண்டு செல்லப்படுவது தடுக்கப்படும் அதே சமயம் தமிழகத்தில் உள்ள மக்களுக்கும் நியாயமான விலையில் கனிம வளங்கள் கிடைக்கும் அரசுக்கும் வருவாய் அதிகமாக கிடைக்கும் இதனை புதிய அரசு ஆய்வு செய்து கேரள மாநிலத்திற்கு மட்டும் கொண்டு செல்ல த்திற்கான பசுமை வரியை அதிகரித்து சட்டம் இயற்ற வேண்டும்.

# பழைய குற்றால அருவியில் சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு கட்டணம் வசூலிப்பதை கண்டித்து

## கம்யூனிஸ்ட் கட்சியினர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு குளிக்கும் நூதன போராட்டம் நடத்தினர்



தென் தமிழகத்தின் சிறந்த சுற்றுலா தளமாக விளங்கும் குற்றாலத்தில் பழைய குற்றால அருவி, பேரருவி, ஐந்தருவி, சிற்றறிவி, புலி அருவி உள்ளிட்ட பல்வேறு அருவிகள் ஆண்டு தோறும் ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் வரும் சீண் காலங்களில் இங்குள்ள அருவிகளில் குளிப்பதற்கு லட்சக்கணக்கான சுற்றுலா பயணிகள் வருகைதருகின்றனர். இந்நிலையில், வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள பழைய குற்றால அருவியில் குளிப்பதற்கு ரூபாய் 20 என்று கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ல்வேறு அமைப்பினர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் இன்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் விவசாய சங்கத்தினர் சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு அருவியில் குளிப்பதற்கு விதிக்கப்பட்ட கட்டணத்தை திரும்பி பெற கோரி குளிக்கும் போராட்டத்தை நடத்தினர். அப்போது பழைய குற்றால அருவியில் சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு விதிக்கப்பட்ட கட்டணத்தை திரும்ப பெற கோரியும் செண்பகாதேவி அருவி அருகே அமைந்துள்ள செண்பகாதேவி அம்மனை தரிசிப்பதற்குதடைவிதிக்கும் வனத்துறையை கண்டித்தும் கண்டன கோஷங்கள் எழுப்பப்பட்டது. இந்த நூதன போராட்டத்தினால் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# "மரங்களை வளர்க்கும் மாணவர்கள்... பசுமையை விதைக்கும் பள்ளி"



சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியின் ஊக்குவிப்பால், மாணவர்கள் தங்கள் வீடுகளில் மரக்கன்றுகளை நட்டு பராமரித்து வருவது பொதுமக்களின் பாராட்டைப் பெற்றுள்ளது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பசுமை வளர்ப்பை மாணவர்களிடம் சிறுவயதிலிருந்தே உருவாக்க வேண்டும் என்ற நோக்கில், பள்ளி நிர்வாகம் மாணவர்களுக்கு மரக்கன்றுகளை வழங்கி அவற்றை வீடுகளில் நட்டு வளர்க்க ஊக்குவித்துள்ளது.



மாணவர்கள் தாங்களே மரக்கன்றுகளை நட்டு, அவற்றை தினமும் பராமரித்து வருகின்றனர். மேலும், வளர்க்கப்படும் மரங்களின் புகைப்படங்களை பள்ளிக்கு அனுப்புமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து பள்ளி தலைமை ஆசிரியர் லெ. சொக்கலிங்கம் கூறியதாவது:

"மரம் வளர்ப்பதன் அவசியத்தை மாணவர்களுக்கு இளமையிலேயே கற்றுக் கொடுத்தால், அது அவர்களின் வாழ்நாள் முழுவதும் நல்ல பழக்கமாக இருக்கும்.மாணவர்களே மரங்களை பராமரிப்பதன்மூலம்,வீடுகளின் அருகில் உள்ளவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுகிறது. தாங்கள் நட்ட மரம் என்பதால், மாணவர்கள் அதனை அதிக அக்கறையுடன் பாதுகாத்து வருகின்றனர்.

கொரோனா காலத்தில் ஆக்சிஜனின் முக்கியத்துவத்தை அனைவரும் உணர்ந்தோம். இலவசமாக ஆக்சிஜன் வழங்கும் மரங்களை அதிக அளவில் வளர்க்க வேண்டும். மாணவர்கள்தான் நாட்டின் எதிர்கால செல்வங்கள்; பசுமையை மீட்டெடுக்கும் பணியை அவர்களிடமிருந்து தொடங்குவது சிறந்த முயற்சியாகும்.

எங்கள் பள்ளி மாணவர்கள் தொடர்ந்து மரங்களை வளர்த்து வருகின்றனர்.ஆசிரியர்கள் நேரில் சென்று பார்வையிட்டு அவர்களை உற்சாகப்படுத்துவதுடன், பள்ளி சார்பிலும் பரிசுகள் வழங்கப்படுகின்றன," என்றார்.

பள்ளியின் இந்த சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முயற்சி, பெற்றோர் மற்றும் சமூக ஆர்வலர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

# சிறுமிக்கு பாலியல் தொல்லை அளித்தவருக்கு 10 ஆண்டுகள் சிறை



திருவள்ளூர்: கும்மிடிப் பூண்டி - எளாவூர் பகுதியை சேர்ந்த 15 வயது சிறுமி, கடந்த 2023-ம் ஆண்டு வீட்டில் தனியாக இருந்தார். எளாவூரை அடுத்த மேட்டுக் குப் பத்தை ச் சேர்ந்த ஜெகநாதன் (35), வீட்டுக்குள் நுழைந்து, சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார்.

சிறுமி யின் பெற்றோர் அளித்த புகாரின் பேரில், கும்மிடிப்பூண்டி அனைத்து மகளிர் காவல் நிலைய போலீஸார் வழக்குப் பதிவு செய் தனர். இந்த வழக்கு விசாரணை, திருவள்ளூர் மாவட்ட போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது.

அரசு தரப்பில் வழக்கறிஞர் புவனேஸ்வரி ஆஜராகி வாதாடினார். ஜெகநாதன் மீதான குற்றங்கள் நிரூபணமானதையடுத்து, மாவட்ட போக்சோ சிறப்பு நீதிமன்ற உமாமகேஸ்வரி ஜெகநாதனுக்கு,வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த குற்றத்துக்கு 10 ஆண்டு சிறை,ரூ.10,000 அபராதம்,பாலியல் தொல்லை கொடுத்த குற்றத்துக்கு 5 ஆண்டு சிறை,ரூ.10,000 அபராதம் விதித்தார்.

சிறுமிக்கு ரூ.1 லட்சம் ஒரு லட்சம் நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் அரசுக்கு நீதிபதி பரிந்துரைத்துள்ளார். செங்குன்றம் அருகே 5 வயது சிறுமிக்கு பாலியல் தொ ல்லை அளித்த வருக்கு 17 ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் 62 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு

# தேனி காங்கிரஸ் கட்சி சார்பில் அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்



முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் 62 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் காங்கிரஸ் கட்சியினர் மற்றும் தலைவர்கள் அவரது திருவுருவச் சிலைக்கு மரியாதை செலுத்தி வருகின்றனர்

இதன் ஒரு பகுதியாக தேனி பழைய பேருந்து நிலையத்தில் உள்ள நேரு சிலைக்கு தேனி நகர் காங்கிரஸ் சார்பில் அவரது திருவுருவ ச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்

தேனி நகர் காங்கிரஸ் தலைவர் சம்சுதீன் தலைமையில் காங்கிரஸ் கட்சிநிர்வாகிகள் கலந்து கொண்டு மறைந்த ஜவஹர்லால் நேருவின் நினைவு தினத்தை முன்னிட்டுஅவரதுதிருவுருவ சிலைக்கு மாலை அணிவித்துமரியாதைசெலுத்தினர் இந்த நிகழ்ச்சியில் தேனி நகர காங்கிரஸ் கட்சிநிர்வாகிகள் கலந்து கொண்டனர்

## தூத்துக்குடியில் திமுக முன்னாள் மாவட்ட செயலாளர் பெரியசாமியின் 9ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு

# முன்னாள் அமைச்சர்கள் கீதாஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன், மேயர் ஜெகன், எம்.எல்.ஏ.க்கள் மார்க்கன்டேயன், கருணாநிதி ஆகியோர் மலர் அஞ்சலி செலுத்தினர்

தூத்துக்குடி மாவட்ட திமுக முன்னாள் செயலாளரும் எம்.எல்.ஏவுமான பெரியசாமியின் 9ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு போல்பேட்டையில் அமைந்துள்ள மணி மண்டபத்திலுள்ள அவரது சிலைக்கு நினைவிடத்தில் பெரியசாமியின் மனைவி எபனேசர், வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கீதாஜீவன், தெற்கு மாவட்ட திமுக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான அனிதா ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ, மேயர் ஜெகன் பெரியசாமி, எம்.எல்.ஏக்கள் மார்க்கன்டேயன்,கருணாநிதி,மற்றும் ராஜா பெரியசாமி, அசோக்பெரியசாமி, அவரது மருமகன்கள் ஜீவன் ஜேக்கப், சுதன்கீலர், மகள்கள், மருமகள்கள், பேரன்கள், பேத்திகள் உள்ளிட்டோர் மலர் அஞ்சலி செலுத்தினர்.



பின்னர் 500 பேருக்கு வேஷ்டி 500 பேருக்கு சேலை, வழங்கினார்கள். மேலும் சுமார் 10 ஆயிரம் பேருக்கு சமபந்தி அன்னதானம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில்மாநிலநெசவாளர் அணி துணைச்செயலாளர் வசந்தம் ஜெயக்குமார், மாநில மீனவரணி துணைச்செயலாளர் புளோரன்ஸ், மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் அன்பழகன், வடக்கு மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ், துணைச்செயலாளர்கள் ராஜ்மோகன் செல்வின், ஆறுமுகம், ஏஞ்சலா, பொருளாளர் ரவிந்திரன், துணை மேயர் ஜெனிட்டா, மாநகராட்சி மண்டல தலைவர்கள் வக்கீல் பாலகுருசுவாமி, நிர்மல்ராஜ், கலைச்செல்வி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## சீர்மரபினர் நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்தல்

# நலத்திட்ட உதவிகள் பெறுதலை எளிதாக்கும் வகையில் இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது

### தூத்துக்குடி கலெக்டர் விஷு மகாஜன் தெரிவித்துள்ளார்



சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு கீழ்கண்ட நலத்திட்ட உதவிகள் கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

1. விபத்து ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் உதவித்தொகை
2. இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை
3. ஈமச்சடங்கு செலவிற்கான உதவித்தொகை
4. கல்வி உதவித்தொகை 5. திருமண உதவித்தொகை
6. மகப்பேறு உதவித்தொகை
7. மூக்குக்கண்ணாடி செலவுத்தொகை ஈடு செய்தல் 8. முதியோர் ஒய்வூதியம்

மேற்படி நலத்திட்ட உதவிகள் பெற 1) சீர்மரபினர் இனத்தைச் சார்ந்தவர்கள் 2)18வயது முதல் 60 வயது நிறைவு பெறாதவர்கள் 3) அமைப்பு சாரா நிறுவனங்களில் பணிபுரியும் குடும்பத்தில் ஒருவர் (அமைப்புசாராதொழில், நிலமற்ற விவசாய கூலி, உடலுழைப்பு தொழிலில் ஈடுபட்டுள்ள) இவ்வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்து நலத்திட்ட உதவிகள் பெற தகுதி பெறுகின்றனர்.

மேற்படி. நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்தல், நலத்திட்ட உதவிகள் பெறுதலை எளிதாக்கும் வகையில் இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இனி www.dncwb.tn.gov.in என்ற இணையதளம் மூலம் விண்ணப்பம் செய்து, பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்கள் அறிய மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன் தெரிவித்துள்ளார்.

## தமிழக சட்டமன்ற தேர்தலுக்கு பின்னர் முதல் முறையாக கூடிய

# தூத்துக்குடி மாநகராட்சிக் கூட்டத்தில் 47 தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன

தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கூட்ட அரங்கில் சாதாரண மாமன்றக் கூட்டம் மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி தலைமையில் நடைபெற்றது. மாநகராட்சி ஆணையர் பிரியங்கா, துணை மேயர் ஜெனிட்டா மற்றும் வார்டு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

சட்டமன்றத் தேர்தலுக்குப் பின் நடைபெறும் முதல்மாமன்றக்கூட்டம் இதுவாகும். மாமன்ற உறுப்பினர்களின் விவாதங்களுக்கு இடையே, மாநகராட்சியின் பல்வேறு வார்டு மேம்பாட்டுப் பணிகள், மக்கள் நலத்திட்டங்கள் மற்றும் பராமரிப்புப் பணிகள் குறித்த 47 முக்கியத் தீர்மானங்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் மேயர் ஜெகன் பெரியசாமி பேசியதாவது: மாநகர வளர்ச்சித் திட்டப் பணிகள் முன்பு போல் தற்போதும் அதிவேகமாகத் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. கோடைக் காலத்தின் பெரும்பகுதி வெற்றிகரமாகச் சமாளிக்கப்பட்டுள்ளது. ஒருசில வார்டுகளில் மட்டுமே குடிநீர்ப் பற்றாக்குறை உள்ளது,அதுவும்விரைவில் சீரமைக்கப்படும். எனவே, பொதுமக்கள் குடிநீரைச் சிக்கனமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.



பக்கிள்ஓடை விரிவாக்கப் பணிகள் விரைவில் தொடங்க உள்ளதால், அங்குள்ள அம்மா உணவகத்தை வேறொரு இடத்திற்கு மாற்றுவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின்படி, நடப்பு நிதியாண்டில் மாநகராட்சியின் நான்கு மண்டலங்களிலும் உள்ள வார்டு அலுவலகங்கள், அங்கன்வாடி மையங்கள், பள்ளிகள், பேருந்து நிலையங்கள் மற்றும் பொதுக் கட்டிடங்களைப் புதுப்பிக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.


குறிப்பாக,கால்டுவெல் காலனி, அமுதா நகர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பகுதி, முத்தையாபுரம் வார்டு அலுவலகங்கள், சிதம்பரநகர் வணிக வளாகப் பிரிவு அலுவலகம், லெவிஞ்சிபுரம் ஆபரேட்டர் அறை ஆகியவற்றைப் பழுதுபார்க்க நிதி வழங்கப்பட்டுள்ளது.

அரசு மருத்துவமனை அருகே நடைபாதை, மழைநீர் வடிகால் வசதிகள் அமைத்தல், காத்திருப்புக் கூடங்களில் கண்காணிப்புக் கேமராக்கள் மற்றும் கொசுவலைகள் பொருத்துதல், மழைக்கால வெள்ளப் பாதிப்புகளைத் தடுக்கப் புதிய கழிவுநீர் மோட்டார் பம்புகள் வாங்குதல் போன்ற பணிகளுக்குப் பல லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், அண்ணா பேருந்து நிலையத்தில் புதிய கடைகள் அமைத்தல், கழிப்பறை பராமரிப்பு, ரயில் நிலைய பிரதானசாலையில்மழைநீர் வடிகால் மற்றும் நடைபாதை சீரமைப்பு, தருவைகுளம்பகுதியில்நாய் பாதுகாப்பு மையக் கட்டிடப் புதுப்பித்தல் ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்பட உள்ளன. இந்தத் திட்டங்களின் மூலம் மாநகரப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டு, பொதுமக்களுக்குச் சுகாதாரமான சூழல் உருவாகும் என்று தெரிவித்தார்.

## இந்தியாவில் எபோலா தொற்று

# இதுவரை இல்லை: மத்திய சுகாதார அமைச்சகம் தகவல்




ஆப்ரிக்காவின் காங்கோ மற்றும் உகாண்டாவில் எ போலா நோய் பரவல் பதிவாகியுள்ளதன் அடிப்படையில், இதனை சர்வதேச பொது சுகாதார அவசர நிலை (PHEIC) என உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. மேலும், காங்கோமற்றும் உகாண்டாவில் தற்போது பரவி வரும் எபோலா வைரஸ் நோயின் 'புண்டிபுகியோ' (Bu ndibugyo) வகைப் பரவலை , ஆப்ரிக்க கண்ட அளவிலான பொது சுகாதார அவசரநிலை (PHECS) என ஆப்பிரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள் (Africa CDC) அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளன.

மே 22 அன்று, உலக சுகாதார நிறுவனம் வெளியிட்ட பரிந்துரைகளில், புண்டிபுகியோ வைரஸ் கண்டறியப்பட்ட பகுதிகளிலிருந்து காய்ச்சல் அறிகுறிகளுடன் வரக்கூடிய பயணிகளைக் கண்டறிந்து, கண்காணிக்கும் நடவடிக்கைகள் மேற்கொ ள்ளப்பட வேண்டும் என்றும், புண்டிபுகியோ வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்ட பகுதிகளுக்குப் பயணம் மேற்கொள்வதைத் தவிர்க்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து,மறு அறிவிப்பு வரும் வரை, காங்கோ, உகாண்டா மற்றும் தெற்கு சூடான் ஆகிய நாடுகளுக்கு அத்தியாவசியமற்ற பயணங்களை மேற்கொள்வதைத் தவிர்க்குமாறு இந்திய அரசு அனைத்து இந்தியர்களுக்கும் அறிவுறுத்தி உள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில், "காங்கோ, உகாண்டா நாடுகளில் வசித்து வருபவர்கள் மற்றும் இந்நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்பவர்கள், உள்ளூர் அதிகாரிகளால் வெளியிடப்படும் பொது சுகாதார வழிகாட்டுதல்களைக் கண்டிப்பாகப் பின்பற்றுமாறும், கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகிறார்கள்" என்று மத்திய அரசு குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் உகாண்டாவில் இருந்து சமீபத்தில் இந்தியா வந்த பயணி ஒருவருக்கு லேசான உடல் வலி அறிகுறிகள் இருந்ததால் அவர் பெங்களூருவில் உள்ள தொற்று நோய்கள் மருத்துவமனையில் தனிமைப்படுத்தப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. அவரிடம் இருந்து மாதிரி சேகரிக்கப்பட்டு ஆய்வுக்காக தேசிய வைரஸ் ஆய்வு நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டது. அந்த பரிசோதனையின் முடிவில் அவருக்கு எபோலா வைரஸ் பாதிப்பு இல்லை என்பது தெரியவந்துள்ளது.

இதையடுத்து மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இந்தியாவில் எபோலா தொற்று இதுவரை பதிவாகவில்லை. இவ்விஷயத்தில் உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டுதல்களுக்கு இயங்க மத்திய சுகாதாரத் துறை தீவிர கண்காணிப்பை மேற்கொண்டு வருகிறது. அனைத்து அறிவிக்கப்பட்ட நுழைவுப் பகுதிகளிலும் பரிசோதனைகள் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்கின்றன. எனவே, மக்கள் பீதி அடைய வேண்டாம். தவறான தகவல்களைப் பரப்புவதை தவிர்க்க வேண்டும். அதிகாரப்பூர்வ தகவல்களை மட்டுமே நம்ப வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழகத்துக்கு ஜூன் மாதத்துக்கான 9.91 டிஎம்சி தண்ணீர் வழங்க வேண்டும்: காவிரி மேலாண்மை ஆணைய கூட்டத்தில் வலியுறுத்தல்

சென்னை: தமிழகத்துக்கு 9.91 டிஎம்சி தண்ணீர் வழங்க வேண்டும் என, காவிரிமேலாண்மை ஆணைய கூட்டத்தில், தமிழகத்தின் சார்பில் வலியுறுத்தப்பட்டது. டெல்லியில் எஸ் .கே.ஹல்தார் தலைமையில், காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 51-வது கூட்டம் நேற்று நடைபெற்றது.



இக் கூட்டத்தில், தமிழகத்தின் உறுப்பினர் மற்றும் நீர்வளத்துறை செயலாளர் சத்யபிரதா சாகு, சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாகப் பங்கேற்றுத் தமிழகத்தின் கோரிக்கைகளை முன்வைத்தார்.

கூட்டத்தில் பேசிய தமிழக உறுப்பினர், மேட்டூர்அணையின் தற்போதைய நீர் இருப்பு 40.742 டிஎம்சியாக உள்ளதாகத் தெரிவித்தார். தற்போது, அணையில் இருந்து குடிநீர் தேவை, தொழிற்சாலை பயன்பாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு கருதி, விநாடிக்கு 1,003 கன அடி நீர் திறந்து விடப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும்,நடப்பு நீர்ப்பாசன ஆண்டில் (2025- 26), ஜூன் 1 முதல் மே 24-ம் தேதி வரை பில்லிகுண்டுலுவில், தமிழகத்துக்கு வழங்கப்பட வேண்டிய நீரின் அளவு 176.685 டிஎம்சி ஆகும். ஆனால், கர்நாடக அணைகளில் இருந்து வெளியேற்றப்பட்ட உபரி நீரையும் சேர்த்து மொத்தம் 329.166 டிஎம்சி நீர் தமிழகத்துக்குக் கிடைத்துள்ளது.

இதனைச் சுட்டிக்காட்டிய கர்நாடக உறுப்பினர்,தாங்கள் வழங்கிய உபரி நீரையும் கணக்கில் கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.எனினும், கர்நாடகாவின் இந்த வாதத்தை தமிழக உறுப்பினர் சத்யபிரதா சாகு எதிர்த்தார். கர்நாடகம் தனது நீர்த்தேக்கங்களில் தேக்க முடியாமல், வேறு வழியின்றி வெளியேற்றிய உபரி நீரினைத் தங்களுக்கு சாதகமாக சொந்தம் கொண்டாட முடியாது என்றும், அதனைத்தமிழகத்துக்கு வழங்கிய கணக்கில் சேர்க்க இயலாது என்றும், அவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

ஆய்வு மையத்தின் அறிக்கையின்படி, மே 26-ம் தேதி கேரளாவில் தென்மேற்கு பருவமழை தொடங்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.எனவே,இப்பருவமழை இயல்பான அளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாலும், கர்நாடக அணைகளில் போதிய நீர் இருப்பு உள்ளதாலும்,வரும் ஜூன் மாதத்துக்கு தமிழகத்துக்குவழங்கப்பட வேண்டிய 9.91 டிஎம்சி நீரை உச்சநீதிமன்ற உத்தரவின்படி பில்லிகுண்டுலுவில் கர்நாடகம் உறுதி செய்ய வேண்டும் எனத் தமிழக அரசு சார்பில் காவிரி நீர்மேலாண்மை ஆணைய கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.



ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று (27.5.2026) அன்று பொதுமக்கள் குறைதீர்ப்பு கூட்டம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி நேரில் கலந்துகொண்டு பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றார். மனுக்கள் மீது உடனடியாக விசாரணை நடத்தி, உரிய நடவடிக்கை எடுத்து விரைந்து முடிக்க அந்தந்தப் பிரிவு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

# ஈரோடு மாநகர் கோட்டை அருள்மிகு ஆருத்ர கபாலீஸ்வரர் திருக்கோவில் வைகாசி பெருந்திருவிழா வைகாசி தேரோட்டம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கே.கே.ஆனந்தமோகன் வடம் பிடித்து தொடங்கி வைத்தார்!



ஈரோடு மாவட்டம் மாநகரில் புகழ்பெற்ற ஆன்மீகத் தலங்களில் ஒன்றாகப் போற்றப்படும் கோட்டை கஸ்தூரி ரங்கநாதர் மற்றும் ஆருத்ர கபாலீஸ்வரர் (ஈஸ்வரன்) கோவில் வைகாசி பெருந்திருவிழா ஆண்டுதோறும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், இந்த ஆண்டின் முக்கிய நிகழ்வான வைகாசி தேரோட்டத் திருவிழா பக்தி பரவசத்துடன் வெகுவிமரிசையாகத் தொடங்கியது. தேரோட்டத்தை முன்னிட்டு, அதிகாலையிலேயே ஆருத்ர கபாலீஸ்வரருக்குசிறப்புஅபிஷேக ஆராதனைகளும், வண்ணமயமானமலர்அலங்காரங்களும் செய்யப்பட்டு மகா தீபாராதனை காட்டப்பட்டது.அதனைத் தொடர்ந்து, சிறப்பு வழிபாடுகளுக்குப் பின் அலங்கரிக்கப்பட்ட பிரம்மாண்ட தேரில் சுவாமி எழுந்தருளினார். அப்போது தேரடிப் பகுதியில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் "நமசிவாய","அரஹர மகாதேவா" என பக்தி கோஷங்களை எழுப்பி ஈசனை வழிபட்டனர்.பொதுமக்கள் மற்றும் ஆன்மீகப் பெருமக்கள் ஆவலோடு எதிர்பார்த்த இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தேரோட்ட நிகழ்வை, ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் கே.கே.ஆனந்தமோகன் அவர்கள் கலந்து கொண்டு, வடம் பிடித்து இழுத்து முறைப்படி தொடங்கி வைத்தார். இந்த விழாவில் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் கோவில் நிர்வாகத்தைச் சேர்ந்த முக்கியப் பிரமுகர்கள் பலர் முன்னிலை வகித்தனர். குறிப்பாக, இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் பரஞ்ஜோதி, அறங்காவலர் குழு தலைவர் சுப்பிரமணியம், அறங்காவலர்கள் சுந்தர்ராஜ்,ராணி குமரேசன், ராவணன், உபயதாரர்செல்வம்பழனியப்பன் மற்றும் முன்னாள் மாமன்ற உறுப்பினர் விஜயபாஸ்கர் உள்ளிட்டோர் பக்தர்களுடன் இணைந்து தேரை வடம் பிடித்து இழுத்தனர். கோட்டை ஈஸ்வரன் கோவில் தேரோட்டத்தை முன்னிட்டு ஈரோடு மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டு வந்து சாமி தரிசனம்செய்தனர்.தேரோடும் வீதிகளில் பக்தர்களுக்குத் தேவையான குடிநீர், மோர், பிரசாதம் மற்றும் விரிவான பாதுகாப்பு வசதிகள் கோவில் நிர்வாகம் மற்றும் காவல்துறையினரால் சிறப்பாகச் செய்யப்பட்டிருந்தன. பிரம்மாண்ட தேரோட்டத்தை ஒட்டி ஈரோடு கோட்டைப்பகுதி முழுவதும் தற்போது விழாக்கோலம் பூண்டுள்ளது.

# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் (TNPSC) நடத்தப்படும் TNPSCGroup 1, 2/2A மற்றும் Group 4 போட்டித் தேர்வுகளுக்கான ஒருங்கிணைந்த இலவச நேரடி பயிற்சி வகுப்புகள்

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு-

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் (TNPSC) நடத்தப்படும் TNPSC-Group 1, 2/2A மற்றும் Group 4 போட்டித் தேர்வுகளுக்கான ஒருங்கிணைந்த இலவச நேரடி பயிற்சி வகுப்புகள் 04.06.2026 அன்று ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும்மையத்தில்தொடங்கப்படவுள்ளது. இப்பயிற்சி வகுப்புகள் சிறப்பான பயிற்றுநர்களை கொண்டு தமிழ் மற்றும்ஆங்கிலவழியில் நடத்தப்பட உள்ளது. இப்பயிற்சி வகுப்புகளில் Smart Board, இலவச Wifi வசதி, அனைத்து போட்டித்தேர்வுகளுக்கான புத்தகங்கள் அடங்கிய நூலகவசதி,பொது அறிவுக்கான மாதஇதழ்கள், பயிற்சி கால அட்டவணை, நாள்தோறும் சிறுதேர்வுகள் (Spot test),



வாராந்திர தேர்வுகள், இணையவழித் தேர்வுகள் (online test), முழுமாதிரித்தேர்வுகள், மென்பாடக்குறிப்புகள் எடுத்துக்கொள்ள இணையதளத்துடன் கூடியகணிணிவிருப்பமுள்ளவர்கள் வசதியுடன் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட உள்ளது. இப்பயிற்சி வகுப்பில் தங்களது விவரங்களை https://forms.gle/iCZoFVkkLeR-qsNhQ9 Google Form link-கலந்துகொள்ள செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. கடந்த ஆண்டு இவ்வலுவலக தன்னார்வ பயிலும் வட்டம் வாயிலாக நடத்தப்பட்ட இலவச இணையவழிபயிற்சிவகுப்புகளில் கலந்து கொண்டவர்களில் கூட்டுறவுத் துறை உதவியாளர் பணிக்காலியிடத்திற்கான தேர்வு முடிவுகளில் 30 மாணவர்களும், HEALTH INSPECTOR GRADE-II இணையவழி பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டவர்களில் 42 மாணவர்களும் தேர்ச்சி பெற்று அரசுப்பணி பெற்றுள்ளனர். அதேபோல், 2025 ஆம் ஆண்டில் நடைபெற்ற குரூப் 4 தேர்வில் 7 மாணவர்கள் தேர்ச்சி பெற்று நீதித்துறை, பள்ளிக்கல்வித்துறை, ஊரக வளர்ச்சித்துறை,மாசு கட்டுப்பாட்டு வாரியம் போன்ற பல்வேறு அரசுத்துறைகளில் பணிநியமனம் பெற்றுள்ளனர். TNPSC-Gr-2 முதனிலைத் தேர்வில் 10 மாணவர்கள் தேர்ச்சி பெற்று முதன்மைத் தேர்வு எழுதியுள்ளனர்.

மேலும், தமிழ்நாடு அரசு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் கீழ் செயல்பட்டு வரும், மெய்நிகர்கற்றல் வலைதளத்தில் (VLS) மாணவர்கள் தங்கள் சுய விவரத்தினை USER ID மற்றும் PASSWORD மூலம் பதிவு செய்து,பல்வேறு போட்டி தேர்வுகளுக்கான மென்பாடக்குறிப்புகள், மாதிரித்தேர்வுகள்,தினசரி நடப்பு நிகழ்வுகள், மாதாந்திர நடப்பு நிகழ்வுகளை மாணவர்கள் பதிவிறக்கம் செய்து பயன்படுத்திக்கொள்ளலாம். இவ்வாய்ப்பினை ஈரோடு மாவட்டத்தைச் சார்ந்த அனைவரும் பயன்படுத்திக்கொள்ளுமாறு ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கின்றார். மேலும் விவரங்களுக்கு 0424-2275860,9499055943 என்ற தொலைபேசியினை தொடர்பு கொள்ளலாம்.



ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் தலைமையில் (27.05.2026) நேற்று மாநகராட்சி மைய அலுவலக கூட்ட அரங்கில் மாநகரப் பொறியாளர்கள் உடனான கலந்தாலோசனை கூட்டம் நடைபெற்றது. உடன் துணை ஆணையாளர் சரஸ்வதி , செயற்பொறியாளர் ஆனந்தன் உட்பட அலுவலர்கள் உள்ளன.



ஈரோடு மாநகராட்சி மாநகர நல அலுவலர் மரு.கொளரி சரவனன் தலைமையில் நேற்று (27.05.2026) மாநகராட்சி கூட்ட அரங்கில் மாநகர சுகாதார அலுவலர்கள் மற்றும் ஆய்வாளர்கள் உடனான கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.



ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் நேற்று (27.05.2026) மாநகராட்சி மைய அலுவலகத்தில் உள்ள பராமரிப்பு பணிகளை ஆய்வு மேற்கொண்டார்.

# தி.மலை அண்ணாமலையார் கோயிலில் பிரசாதங்களுக்கு தயாரிப்பு, காலாவதி தேதி ஒட்டும் பணி தீவிரம்

திருவண்ணாமலை: திருவண்ணாமலை அண்ணா மலையார் கோயிலில் விற்பனை செய்யப்படும் பிரசாதங்களுக்கு தயாரிப்புதேதி மற்றும் காலாவதியாகும் தேதி ஒட்டும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்து சமய அறநிலைய துறை அமைச்சர் சீ.ரமேஷ் கடந்த மே 24-ம் தேதி திருச்சி மாவட்டம் திருவாணைக்காவல் அகிலாண்டேஸ்வரி உடனுறை ஜம்புகேசுவரர் கோயிலில் ஆய்வு செய்தார்.

அப்போது, கோயில் பிரசாத விற்பனை நிலை




யத்தில் விற்பனை செய்யப்படும்உணவுபொருட்கள்மற்றும்பிரசாதங்கள் உணவு பாதுகாப்பு விதிமுறைகள் முழுமையாக கடைபிடிக்கப்படுகிறதா?, உணவு பொருட்களின் தயா ரிப்பு தேதி, காலாவதி தேதி குறிப்பிடப்பட்டுள்ளதாக என ஆய்வு செய்தார்.

அப்போது,தேதி குறிப்பிடாமல்விற்பனைசெய்வதை கண்டறிந்த அமைச்சர் உடனடியாக தயாரிப்பு, காலாவதி தேதி குறிப்பிடாமல் கோயில் களில் பிரசாதங்கள், உணவு பொருட்களை விற்பனை செய்யக்கூடாது என உத்தரவிட்டார். திரு வண்ணாமலை அண்ணா மலையார் கோயிலில் பக்தர் களுக்கு விற்பனை செய்யப்படும்பிரசாதங்களின் பாக் கெட்டுகளில் தயாரிப்பு மற்றும் காலாவதி ஆகும் தேதி அச்சிட்டு ஒட்டும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுவரை கோயிலில் விற் பனை செய்யப்பட்டு வந்த பிரசாதங்களில் தயாரிப்பு, காலாவதி தேதி குறிப்பிடாமல் விற்பனை செய்யப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

# SIR valid, but ECI needs to help deleted voters, says Supreme Court in big ruling

*The Supreme Court on Wednesday ruled that Election Commission of India (ECI) had the authority to conduct the Special Intensive Revision (SIR) exercise and did not transgress any statutory or constitutional provision. The top court was delivering its judgement on a batch of petitions challenging the SIR of electoral rolls in Bihar.*



*The Supreme Court also upheld the power of the ECI to scrutinise citizenship during the SIR while clarifying that a refusal by the poll to include names won't mean stripping people off their citizenship.*

*Any deletion on this ground will be subject to further adjudication, the apex court said and also directed the ECI to send people, whose names were deleted on the ground of not being able to prove citizenship, to competent authority for suitable adjudication.*

*SIR has a direct nexus with free and fair election, said the Supreme Court, noting that the ECI has power to conduct revision of electoral rolls under constitutional scheme and Representation of the People Act.*

*What is SIR*

*SIR is an electoral roll cleansing drive that the EC started with Bihar in June last year, citing concerns about bogus, duplicate, and ineligible voters - including deceased individuals and "illegal immigrants".*

*The SIR, launched to remove these entries and ensure the list is accurate and updated, sparked criticism from the Opposition, which alleged that the exercise is a strategic voter roll clean-up drive by the poll body to benefit the BJP.*

*The Supreme Court also affirmed on Wednesday the procedure adopted by the ECI during the SIR exercise, adding the revision was founded on a legitimate and constitutional purpose and adopted a fair process.*

*"Having regard to the nature of the problem sought to be addressed, the scale of the exercise undertaken and the procedural safeguards incorporated during its implementation, the measures adopted by the Commission cannot be said to be disproportionate to the objective sought to be achieved," the Supreme Court said.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.